பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை 14.10.2022 கதிர் 230

கொழும்பில் அரசுக்கு எதிராக

## நவம்பர் 2 ஆம் திகதி மாபெரும் போராட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கொழும்பில் எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி மாபெரும் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞8

## ஞாயிறன்று நாவலப்பிட்டியில் களமிறங்குகின்றார் மஹிந்த



நாவலப்பிட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் ☞2

# யாழில் காணிக்குள் 111 கைக்குண்டுகள்



இன்று மீட்டது எஸ்.ரி.எப்.



யாழ்ப்பாணத்தில் இன்று 111 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடி படையினரால் இந்தக் கைக் ☞2

# எந்தத் தேர்தலும் இப்போது இல்லை



## எதிரணிக்கு வஜிர பதிலடி

நாட்டில் எதிர்வரும் மாதங்களில் எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பில்லை. நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான தேசிய கொள்கை கட்டமைப்பை வகுத்த பின்னரே தேர்தல் நடத்தப்படும். ☞8

## கோதுமை மாவின் விலை குறைப்பு

கோதுமை மாவின் மொத்த விலை இன்று முதல் குறைக்கப்படுகின்றது என்று அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதி மற்றும் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஒரு கிலோ கோதுமை மாவின் விலையானது 375 ரூபாவில் இருந்து 290 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## மோ. சைக்கிள் மோதி பெண்ணொருவர் பலி

களுத்துறையில் இன்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

பேருவளை - மக்கொன - ஹல்கந்தவில வீதியின் வெல்லசந்திப் பகுதியில் ☞8

## நலிவுற்றோரை அடையாளம் காணும் அளவுகோல் பற்றி இலங்கை அரசிடம் கேள்வி எழுப்ப வேண்டும்

ஆஸ்திரேலியத் தூதுவரிடம் மனோ இடித்துரைப்பு



நலிவுற்றோரை அடையாளம் காணும் அளவுகோல்கள் பற்றி இலங்கை அரசிடம் கேள்வி எழுப்ப வேண்டும்.

- இவ்வாறு இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவரிடம் வலியுறுத்தினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இலங்கைக்கும், மாலைதீவுக்குமான ஆஸ்திரேலியத் தூதுவரின் போல் ஸ்டீபனைத் தூதுவரின் கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்து உரையாடியபோதே மேற்கண்டவாறு தாம் வலியுறுத்தினார் என்று மனோ கணேசன் எம்.பி. இன்று வெளியிட்டுள்ள ☞8

## மைத்திரிக்கு எதிரான விசாரணை பத்து வாரங்களுக்கு ஒத்திவைப்பு

மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான விசாரணையை ஒத்திவைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு ☞2

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு அதீத அக்கறை

நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது. அது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு பரிந்துரைகள் பலவற்றையும் வழங்கியுள்ளது. அந்தப் பரிந்துரைகளை ☞2

## யாழில் கட்டடத்திலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

10 பேர் தடுத்துவைத்து விசாரணை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் வேம்படி சந்திக்கு அண்மையாகப் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. ☞8

## பாரிய பண மோசடி: சீனத் தம்பதி கைது

விமான நிலையத்தில் மடக்கிப் பிடித்தது சி.ஐ.டி.



இலங்கையில் பாரிய பண மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சீனத் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஸ்போர்ட்ஸ் செயின்' என்ற கணினி மென்பொருளை அறிமுகப்படுத்தி பிரமிட் திட்டத்தில் பணத்தை முதலீடு செய்து 1,500 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்தனர் என்று ☞2

## யாழில் குற்றங்கள் அதிகரித்த இடமாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியம்

மக்கள் கடும் விசனம்

யாழ்., காங்கேசன்துறை பொலிஸ்பிராந்தியத்துக்குட்பட்ட பகுதிகளில் அண்மைய நாள்களாக குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்று விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள், பொலிஸ் இந்த விடயத்தில் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட ☞8

## வடமராட்சியில் லொஹான் ரத்வத்தயை நோக்கிப் பாய்ந்த நாய் சுட்டுக்கொலை!

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறைப் பகுதிக்கு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனிப்பட்ட விஜயம் மேற்கொண்ட போது அவரது மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நாய் ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்திருந்த இராஜாங்க அமைச்சர் தனது நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக வல்வெட்டித்துறைக்குச் சென்றிருக்கின்றார்.

அங்கு வளர்ப்பு நாய் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயைக் கண்டதும் குரைத்ததுடன் அவரை நோக்கிப் பாய்ந்துள்ளது. ☞2

## மைத்திரிக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன இன்று காலை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வருகை தந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணையை இடைநிறுத்தி, உத்தரவொன்றைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பிலேயே அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையானார்.

நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படது.

அதன்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான தனிப்பட்ட முறைப்பாடு வழக்கை இன்று முதல் 10 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் கோட்டை நீதிவானுக்கு உத்தரவிட்டது.

## யாழில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி, அட்டகிரி பகுதியில் காணி ஒன்றை அதன் உரிமையாளர் கடந்த 11ஆம் திகதி உழவுக்குட்படுத்திய நிலையில் சந்தேகத்துக்கிடமான பொருளை அவதானித்துள்ளார்.

இதையடுத்து இது குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் கைக்குண்டுகளை அடையாளம் கண்டனர்.

இந்தநிலையில், நீதிமன்ற அனுமதி பெற்று இன்று காலை 6 மணி முதல் யாழ். மாவட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளின் போது 111 கைக் குண்டுகள் மீட்கப்பட்டன.

இந்தக் கைக்குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் எடுத்துச் சென்றனர்.

## ஞாயிறன்று..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிந்தானந்த அளுத்கமகேவினால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து வெளியேறிய பின்னர் மஹிந்த ராஜபக்ச கலந்துகொள்ளும் இரண்டாவது மக்கள் சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே அரசு தீர்வு காணும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்களுடன் பேச்சு ஆரம்பமா கின்றது என்றும், அந்தப் பேச்சு வெற்றிபெறுமானால் இலங்கை மீது சர்வதேசத்தின் தலையீடு காணப்படாது என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு தேசிய பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்பார்ப்பாகவுள்ளது. எனினும், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கையே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அந்தவகையில் உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் தீர்வுக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் பெறுபேறுகள் கிடைக்கும் பட்சத்தில் அதற்கான சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சின் கீழ் மூன்று அலுவலகங்கள் செயற்பட்டுவருகின்றன. அந்தவகையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமும் அதில் உள்ளடங்குகின்றது.

அந்த அலுவலகத்திலுள்ள 7 ஆயிரம் கோவைகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் 65 கோவைகள் மாத்திரமே விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்துவதற்கு இத்தகைய தாமதங்களே முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

கடந்த மூன்று மாத காலங்களில் நாம் 1,800 கோவைகளை விசாரணை செய்திருக்கின்றோம். அதற்கிணங்க அடுத்த வருட இறுதிக்குள் அனைத்துக் கோவைகளையும் விசாரணை செய்து முடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த விசாரணைகள் முடிவடைந்ததும் அந்த விடயங்களை இழப்பீட்டுக்கான அலுவலகமே கையாளவுள்ளது.

அரசானது அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவை இரண்டு இலட்சமாக அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. கடந்த அமைச்சரவையில் அதற்கான அனுமதி கிடைத்துள்ளது - என்றார்.

## வடமராட்சியில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்போது இராஜங்க அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் அந்த நாய் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான குறித்த நாய் உயிரிழந்துள்ளது.

இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மெய்ப்பாதுகாவலர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியதால் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குத் தகவல் வழங்க பொலிஸார் மறுத்தனர்.

## பாரிய.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் சீன தம்பதியினரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றிரவு மலேசியா செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் காத்திருந்த போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் உடனே கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ன கெகுனாவெல முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் 35 மற்றும் 25 வயதுடைய கொழும்பு - 5 பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்துவந்தவர்கள் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பகல் கனவுப் பேச்சு

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன்' என்றானாம். இந்த மாதிரி கருத்துரைத்திருக்கின்றார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

"பொறுப்பு கூறல் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையின் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருகின்றோம். அடுத்த மாதம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் வெற்றிபெற்றால் இலங்கை விடயத்தில் சர்வதேச தலையீடுகள் இருக்க மாட்டாது" – என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

நீதி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

சர்வதேச பொறிமுறையின் ஊடாக சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்பதே ஐ.நாவின் நோக்கமாக இருக்கிறது. ஆனால் தேசிய பொறிமுறையின் ஊடாக பிரச்சினைகளுக்குதீர்வை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

தேசிய பொறிமுறையின் ஊடாக சில பெறுபேறுகள் கிடைக்கும் பட்சத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் எனவும் அவர் நம்புகிறார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் தானும் அதிபர் ரணிலும் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும், அடுத்த மாதமும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்றும், இது வெற்றியடைந்தால், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடுகளை இல்லாது , இலங்கைக்கு அவை ஆதரவளிக்கும் என்றும் அவர் நம்புகிறார்.

இந்தக் கருத்துக்களைப் பார்க்கும்போது நீதி அமைச்சரும், ஜனாதிபதியும் யதார்த்தங்கள் பற்றிய புரிதல்களின்றி கனவுலகில் சஞ்சரிக்கின்றனரோ என்ற சந்தேகம்தான் மேலெழுகின்றது.

யுத்தம் பேரழிவு நடந்த நாட்டில், அதன் போது இழைக்கப்பட்ட குற்றங்களால் பாதிப்புற்ற தரப்புகளும் மக்களும் இங்கு நீதி, நியாயம் வேண்டி குமுறிக் கொண்டிருக்கும்போது, அவர்களின் மனக்கதவைத் தட்ட சற்றேனும் முயற்சி எடுக்காமல், பேரினவாதத் திமிரோடு நடந்தபடி, மறுபுறத்தில் முகம் தெரியாத சில புலம்பெயர் தரப்புகளுடன் தாம் நடத்தும் தந்திரோபாய காய் நகர்த்தல்கள், யுத்தப் பாதிப்புகளினால் கிளர்ச்சி கொண்டிருக்கும் ஓரினக் குழுமத்தையும், அவர்களை கையாண்டு தாஜா செய்வதன் மூலம் மறுபக்கத்தில் நீதியை நிலைநாட்ட வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் கருத்தியலையும் சமாளிக் கலாம் என்று அவர்கள் பகல் கனவு காண்கின்றனர் என்றே தோன்றுகின்றது உள்நாட்டில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அடிப்படைக் கோரிக்கையான உண்மையைக் கண்டறிதல் விடயத்தில் ஓர் அடி கூட எடுத்து வைக்காத – அப்படி நீதி செய்யும் நேர்மையான நோக்கமே கொண்டிராத தென்னிலங்கைப் பேரினவாதம் வைகுண்டம் போவது பற்றி பகல் கனவு காண்கிறது என்பதையே நீதி அமைச்சரின் கருத்துரைப்பு பிரதிபலிக்கிறது.

# காலநிலை மாற்றத்தால் இலங்கை மிகவும் பாதிப்படைந்து உள்ளது!

## ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் கருத்து



காலநிலை மாற்றத்தால் இலங்கை மிகவும் பாதிப்படைவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்துள்ள சொல்ஹெய்மிடம் ஆங்கில ஊடகமொன்று மின்னஞ்சலில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் மண்சரிவு மற்றும் தீவிர வானிலை அச்சுறுத்தல்கள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் காலநிலை மாற்றத்தைக் கையாள்வது பசுமையான வேலைகளை உருவாக்குவதற்கும் அனைத்து இலங்கையர்களையும் ஓர் ஒழுக்கமான நடுத்தர வர்க்க வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கும் 'ஒரு மகத்தான வாய்ப்பு' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து ஒரு பசுமையான பாதையைக் கண்டுபிடிப்பதற்கு இலங்கைக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அவரது சிறந்த குழுவினருடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மிகவும் வளமான அறிவுசார் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது என்றும் மற்ற இந்தியப் பெருங்கடல் நாடுகள் மற்றும் உலகின் பிற நாடுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது என்றும் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

# வெடுக்குநாறி மலை வழக்கில் ஆலயம் நிர்வாகம் விடுதலை!



வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து ஆலயத்தின் நிர்வாகத்தினர் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை ஆயர்படுத்துமாறு வவுனியா நீதிவான் பொலிஸார் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும், நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) இந்த வழக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா,

மற்றும் நிர்வாகத்தினர்களான தமிழ்செல்வன், சசி ஆகியோர் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி சம்பத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதராங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை இந்த வழக்கு தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளுக்கு ஆலயத்தின் நிர்வாகத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் நீதிவானால் உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

# சுழற்சி முறைக் கடன் திட்டத்திற்கு புளொட் அமைப்பால் நிதி அன்பளிப்பு




யாழ்ப்பாணம் தாவடி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறைக் கடன் வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சமூக மேம்பாட்டுப் பிரிவினால் ஒரு தொகை நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தாவடி வடக்கில் வலி தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சந்திரவதனி தலைமையில் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கனடா முக்கியஸ்த்தர் கே.கந்தசாமியின் நிதிப் பங்களிப்பில் மாதர் அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளிடம் இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி . தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.தர்ன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஊடக இணைப்பாளர் இ.தயாபரன் மற்றும் முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிரோர் ஆகியோர் கலந்து கொண்டு நிதியை வழங்கி வைத்தனர்.

நடைபெற்ற முடிந்த கடந்த க.பொ.த. உயர்தர பரீட்சையில் வர்த்தக பிரிவில் 3ஏ சித்தி பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி

மாணவி காந்தராசா நந்தாயினிக்கு அவரது பெறுபேற்றை பாராட்டி கே.கந்தசாமியினால் ரூபா இருபதாயிரம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாகிஸ்தானில் பஸ்ஸில் தீவிபத்து; 18 பயணிகள் உடல் கருகிப் பலி!



கராச்சி ஒக்.14

பாகிஸ்தானின் நூரியா பாத் பகுதியில் பஸ் ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் பலர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பஸ்ஸினுள் தீ பரவியவுடன் பயணிகள் சிலர் பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்துக் கீழே குதித்துத் தப்பினர். ஆனால் பஸ்ஸினுள்ளே சிக்கிக் கொண்ட குழந்தைகள் உள்பட 18 பேர் தீயில் கருகி பலியாகியமையுடன், 28க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பஸ்ஸினுள் இருந்த குளிர்சாதனப் பகுதியில் தீப்பிடித்தமையே தீவிபத்து ஏற்படக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. தீப்பிடித்த பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில், பாகிஸ்தானில் பெய்த கனமழையால் பெரும்பாலான மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு கராச்சியில் தங்க வைக்கப்பட்டனர். தற்போது வெள்ள பாதிப்பு குறைந்ததால் கராச்சியில் இருந்து சைர்பூர் நாரன் ா பகுதிக்கு மக்கள் பஸ்ஸில் சென்ற போதே விபத்தில் சிக்கினர். பலியானவர்களில் பெரும் பாலானோர் குழந்தைகள் எனக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய வெடிமருந்துக் கிடங்கை தகர்த்தன உக்ரைன் படைகள்

## இருதரப்பும் மோதலில் உக்கிரம்



உக்ரைன் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் ரஷ்யா எல்லை பகுதியான பெல்கோரோட் பிராந்தியத்தின் ஒரு கிராமத்தில் உள்ள ரஷ்ய வெடிமருந்து கிடங்கு ஒன்று தகர்க்கப்பட்டள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன்- ரஷ்யா போர் கடந்த 8 மாதங்கள் நீண்டு வருகின்ற நிலையில், நாற்பதுக்கும் மேற்பட்ட நகரங்கள் மீது நேற்று ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் உக்ரைன் விமானப்படை 25 ரஷ்ய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், கருங்கடலுக்கு அருகே கப்பல் கட்டும்மையம் மற்றும் துறைமுகம் மீதும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாகவும், மைகோலாயின் தெற்கு நகரம் கடுமையான குண்டு வீச்சுச் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, உக்ரைன் படையினர் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் இந்த ஆயுதக் கிடங்கு முற்றிலும் சேதமடைந்தது என்று ரஷ்யாவுக்கு உட்பட்ட பெல்கொரோட் பிராந்தியத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார். மேலும், அங்கிருந்த பொதுமக்கள் தற்போது பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள் என்றும் பெல்கோரோட் பிராந்தியத்தின் ஆளுநர் வியாசஸ்லாவ்கிளாட்கோவ்குறிப்பிட்டடுள்ளார்.

# அமெ. வட கரோலினாவில் துப்பாக்கிச் சூடு: ஐவர் பலி




வொஷிங்டன்,ஒக்.14

அமெரிக்காவின் தெற்கு மாகாணமான வடக்கு கரோலினாவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு பொலிஸ் அதிகாரி உள்பட 5 பேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வடக்கு கரோலினாவில் உள்ள ராலே நகரத்தில் நேற்று மாலை 5 மணியளவில் பொதுமக்களை நோக்கி ஒரு மர்மநபர் திடீரென சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். பின் அங்கிருந்து அவர் தப்பித்துச் சென்றுள்ளார். எனினும் பொலிஸாரின் தீவிர நடவடிகையால், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் அப்பகுதியில் கைது செய்யப்பட்டார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டின் போது காயமடைந்த மேலும் ஓர் அதிகாரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டு வன்முறை பெரிய பிரச்சினையாக உருவாகிவரும் நிலையில், கடந்த ஓராண்டில் மட்டும் மட்டும் 49,000 பேர் துப்பாக்கிச் சூட்டில் இறந்துள்ளனர். அதாவது நாள் ஒன்றுக்கு சராசரியாக 130க்கும் மேற்பட்டோர் துப்பாக்கிச் சூடு சம்பவங்களால் உயிரிழந்தனர் என்று ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது

# ஈராக் நாடாளுமன்றத்துக்கு முன்பாக நடந்த குண்டுத் தாக்குதலால் பதற்றம்

பாக்தாத், ஒக்.14

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பாதுகாப்பு அதிகமுள்ள பசுமை மண்டல பகுதியில் ரொக்கெட் . தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாக்தாத் நகரை சுற்றிலும் ஒன்பது ரொக்கெட்டுகள் மூலம் சக்தி வாய்ந்த குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டதில் பொதுமக்களில் பலர் காயம் அடைந்தனரென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாக்தாத்தில் உள்ள பசுமை மண்டல பகுதியில் பல்வேறு நாட்டு தூதரகங்களும் அரசு அலுவலகங்களும் உள்ள நிலையில், புதிய அதிபரை தேர்வு செய்வதற்காக ஈராக் நாடாளுமன்றம் கூட இருந்த சில நிமிடங்களுக்கு முன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. நாடாளுமன்ற கூட்டத்தை சீர்குலைக்கும் நோக்கத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரானில் நாடாளுமன்றத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவது இது முதல் முறையல்ல எனவும், கடந்த மாதம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை தீர்மானம் கொண்டு வர இருந்த சில நிமிடத்திற்கு முன்பாக ரொக்கெட் தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நரபலி சர்ச்சைகளின் விளைவாக மேலும் ஒரு பெண் சாமியார் கைது



பாலக்காடு, ஒக்.14

பத்தினம்திட்டா அருகே சிறுவர்-சிறுமிகளை பூஜைகளுக்கு பயன்படுத்திய பெண் சாமியார் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்.

பத்தினம்திட்டா அருகே உள்ள மலையாளபுழா பகுதியில் வசந்தி அம்மா மடத்தில் வசித்து வந்த ரோபனா (வயது 52)என்கின்ற பெண் சாமியார் கடந்த பல வருடமாக மந்திரவாதங்கள் நடத்தி வந்துளார்.

இந்த மந்திரவாதம் செய்யும் போது தனக்கு தெரிந்த சிறுவர்- சிறுமிகளை பயன்படுத்தி கொள்வதை வழக்கமாக கொண்ட இவர் சில நேரம் மந்திரவாதம் செய்யும் போது சிறுவர்-சிறுமிகள் மயங்கி விழ வைத்து உள்ளார். மந்திரவாதத்தில் ஈடுபடும் போது இவர் பலத்த குரல் எழுப்பி சிறுவர்களை பயமுறுத்தியும் உள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் இதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்திருந்த நிலையில், பொலிஸார் கண்டுகொள்ளவில்லை.

இந் நிலையில் பத்தனம்திட்டா மாவட்டத்தில் நடந்த நரபலி சம்பவத்தையொட்டி கடந்த 2 தினங்களுக்கு முன்பு பெண் சாமியார் ரோபனா மீது மீண்டும் பொதுமக்கள் புகார் கொடுத்தார்கள். புகாரை பெற்றுக் கொண்ட பத்தினம்திட்டா பொலிஸ் அதிகாரிகள் நேற்று காலை மடத்துக்கு சென்று ரோபனாவிடம் விசாரணை நடத்தினார்கள்.

விசாரணையில் சிறுவர்-சிறுமிகளை பூஜை செய்ய உதவியாக பயன்படுத்தியமை தெரியவந்ததையடுத்து பொலிஸார், வழக்குப்பதிவு செய்து ரோபனாவை கைது செய்தனர். மேலும் மடத்தில் இருந்த சிறுவர்-சிறுமிகள் மீட்கப்பட்டு காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பாக பெண் சாமியாரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஏற்கனவே 2 பெண்கள் நரபலி கொடுக்கப்பட்டு உள்ளமையால், இந்த பெண் சாமியார் ரோபனாவும், சிறுவர்-சிறுமிகளை நரபலி கொடுப்பதற்காகவே பூஜைகள் நடத்தினாரா என்பது உள்பட பல்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து உள்ளார்கள்.



## மத்திய அரசு இந்தித் திணிப்பா? அண்ணாமலை அடியோடு மறுப்பு

சென்னை, ஒக்.14

மூன்று மொழிகளைக் கற்க வேண்டும் என்பதே மத்திய அரசின் கல்வி கொள்கை. இந்தித் திணிப்பை மத்திய அரசு செய்யவில்லை. மீறிச் செய்தால் அதனை தமிழக பா.ஜ.க.எதிர்க்கும் எனத் தெரிவித்துள்ளார், தமிழ்நாட்டின் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை.

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி திணிப்பு முயற்சியை மத்திய பா.ஜ.க. அரசு கையில் எடுத்திருப்பது, அந்த மொழி பேசாத மாநிலங்களின் எதிர்ப்புக்கு வழிவகுத்துள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்ப்பை வெளியிட்ட நிலையில், தமிழகத்தை தொடர்ந்து கேரளா, தெலுங்கானா மாநிலங்களும் இந்தி திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், அமெரிக்க பயணம் மேற்கொண்ட பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை

பயணத்தை முடித்து கொண்டு சென்னை திரும்பியுள்ளார். இதன்போது, சென்னை

விமான நிலையத்தில் அண்ணாமலை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அதன்போது அவர் கூறியதாவது :

இந்தி மொழியை மத்திய அரசு திணிக்கவில்லை. மூன்று மொழியை கற்க வேண்டும் என்பது மத்திய அரசின் கல்வி கொள்கை. இந்தித் திணிப்பை மத்திய அரசு செய்தால், தமிழக பா.ஜ.க. அதனை எதிர்க்கும். யார் இந்து, யார் இந்து இல்லை என்று கண்டுபிடிப்பதுதான் தற்போது பேன் ஆக

உள்ளது. காங்கிரஸ் ஆட்சியில்தான் இந்தி கட்டாயம் என இருந்தது. காங்கிரஸ் இந்தி மொழியை திணித்த போது தி.மு.க. 10 ஆண்டுகள் கூட்டணியில் இருந்தது. மத்திய அரசு மூன்று மொழியை படிக்க வேண்டும் வேண்டும் என சொல்லி வருகின்றது. இந்தி கற்பதில் தமிழகம் சி நிலையில் உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கி தந்தை, மகன் சாவு; இடிவிழுந்ததில் முதாட்டி உயிரிழப்பு



பெங்களூர், ஒக்.14

கர்நாடகாவல் பெலகாவி, கலபுரகி, பாகல்கோட்டை, யாதகிரி, கதக் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த 2 நாள்களாகக் கனமழை பெய்து வருகின்ற நிலையில், நேற்று முன்தினமும் அந்த மாவட்டங்களில் பலத்த மழை பெய்தமையால் 4 பேர் பலியாகி உள்ளனர்.

கலபுரகி மாவட்டத்தில், சேடம் தாலுகா பல்லங்குந்தி கிராமத்தை சேர்ந்தவர் துலஜா நாயக் மற்றும் அவரது மகன் அவின் இருவரும் நேற்று முன்தினம்வீட்டின்அருகேநின்றுகொண்டுஇருந்தபோது பெய்த மழையில் தந்தை, மகன் இருவரையும் மின்னல் தாக்கியுள்ளது. இதன் காரணமாக சம்பவ இடத்திலேயே இரண்டு பேரும் உடல் கருகி இறந்துள்ளனர். மேலும், பாகல்கோட்டை மாவட்டம் வர்ஜகல் கிராமத்தில் பெய்த மழையில் மின்னல் தாக்கியதில் கிருஷ்ணப்பா என்கின்ற விவசாயி ஒருவரும் உயிர் இழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கதக் மாவட்டம் கந்தலாநகரை சேர்ந்த சுசுமா என்பவர் நேற்று முன்தினம் நள்ளிரவு தனது வீட்டில் குடும்பத்தினருடன் உறங்கிக் கொண்டிருந்த போது பலத்த மழை மற்றும் இடிமுழக்கத்தின் காரணமாக வீட்டுசுவர் திடீரென்று இடிந்து விழுந்தமையால், தலையில் பலத்தகாயம் அடைந்த அவர் பரிதாபமாக உயிர் இழந்தார்.

அத்துடன், அவரது குடும்பத்தினர் இருவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று

வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்,பாகல்கோட்டையில் பெய்த பலத்தமழை காரணமாக பீலகி, பாதாமியில் இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளமையுடன் அங்கு வசிப்பவர்கள் கடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

## நீட் தேர்வுக்கு எதிரான ரிட் மனு மீது விசாரணை உச்ச நீதிமன்றில் இன்று



புதுடெல்லி, ஒக்.14

நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்ட திருத்தத்திற்கு எதிராக தமிழக அரசு கடந்த 2020 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்ததுடன், தற்போது இந்த மனுவில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் உச்சநீதிமன்றில் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், மருத்துவ படிப்பில் சேர நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்டத் திருத்தத்தால், கிராமப்புற மாணவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பது குறித்து விரிவான புள்ளிவிவரங்களைத் தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த ரிட் மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சுதான்சு, தூலியா அண்மையில் விசாரித்த போது, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள தமிழக அரசின் வலியுறுத்தல்களை கருத்தில் கொண்டு ரிட் மனுவை விசாரணைக்கு உகந்தது என்று நீதிபதிகள் உத்தர விட்டனர்.

இதன் மூலம் நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்ட திருத்தத்திற்கு எதிராக தமிழக அரசு தாக்கல்செய்தரிட் மனுவிரைவில்விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்த விசாரணை உச்ச நீதிமன்றில் இன்று நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சி அமர்வு







(நூருள் ஹுதா உமர், எஸ். அஷ்ரப்கான், சியாத் எம். இஸ்மாயில், சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத் துவத்தில் ஊடகவியலாளர்களின் பங்குகள் தொடர்பிலான கலந்துரையாடலும், செயலமர்வும் நேற்று அம்பாறை தனியார் விடுதியில் அனர்த்த முகாமைத்துவ நிலைய அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வை அம்பாறை அரசாங்க அதிபர் ஜே. எம்.ஏ. டக்ளஸ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வளவாளர்களாக அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் சுகத் திஸாநாயக்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், முகாமைத்துவ நிலைய அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ், வளிமண்டலவியல் திணைக்கள உதவிப்பணிப்பாளர் துலாரி பெர்னாண்டோ, மாவட்ட உத்தியோகத்தர் ஏ.எம். பிரோஸ், அனர்த்த முகாமைத்துவ நிலைய ஊடகப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் ஜானக ஹெதுன் பதிரஜ ஆகியோர் கலந்து கொண்டு அனர்த்தங்கள் தொடர்பிலும், அபாய எச்சரிக்கை தொடர்பிலும், முன்னாயத்த விடயங்கள் தொடர்பிலும் இவற்றில் ஊடகங்களின் பங்களிப்பும், ஊடகவியலாளர்களின் சேவைகள் தொடர்பிலும் விரிவுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களையும் சேர்ந்த மும்மொழி ஊடகங்களிலும் கடமையாற்றும் ஊடக வியலாளர்கள் கலந்து கொண்டனர்.




# 'தம்பலகாமம்' ஊர்ப் பெயர் பற்றிய வரலாற்று ஆய்வு நூலின் வெளியீடு

## ஞாயிறன்று திருகோணமலையில்

(ஹஸ்பர்)

வைத்தியர் த. ஜீவராஜ் அவர்களின் 'தம்பலகாமம் ஊர்ப் பெயர் ஆய்வு' என்ற வரலாற்று ஆய்வு நூல் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வெளியீடு செய்யப்படவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜே. ஸ்ரீபதி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ் அருள்ராஜும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணி பாளர் வைத்தியர் வி. பிரேம னந்தும் கலந்து சிறப்பிக் உள்ளனர்.

இந்நிகழ்வில் வெளியீட் உரையை கலாபூசணம் வே தங்கராசாவும், அறிமு உரையை கலாநிதி இ. ஸ்ரீ ஞானேஸ்வரனும், நூல் தொட பான கருத்துரையை சற்குணம் சத்யதேவனும் நிகழ்த்த உள் ளனர்.

நிகழ்வை கவிஞர் தில்லை நாதன் பவித்திரன் தொகுத்து வழங்க இருக்கிறார். வரலாற்று ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிற பிக்குமாறு ஏற்பாட்டுக் குழு வினர் அழைத்துள்ளனர்.

# மண்டூர் வீட்டு வளாகத்தில் உட்புகுந்த காட்டு யானை



## தோட்டப் பயிர்கள் சேதம்

(பழுவூரான்)

வெல்லாவெளி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவில் காட்டு யானை வீட்டு வளாகத்தில் உட்புகுந்து அங்குள்ள தோட்ட பயிர்களை சேதப்படுத்திச் சென்றுள்ளது. இதனால் அப்பிரதேசங்களில் மக்கள் பெரும் அச்சத்துடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரதேசக் காட்டில் வாழும் யானைகள் கிராமங்களுக்குள் உட்பிரவேசிப்பதைத் தடுக்க உரிய டவடிக்கை எடுக்காவிடின் மக்களின் உயிர் மற்றும் உடமைகள் அழிவுறும் நிலை ஏற்படலாம் என இப்பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# அக்கரைப்பற்று வைத்திய அத்தியட்சகராக ரொஷான் ஞானகுணாளன் பொறுப்பேற்பு







வைத்தியர் ஞானகுணாளன் போல் ரொஷான் மருத்துவ நிர்வாக முதுகலை மாணி பட்டப்பயிற்சியை (M.Sc. in Medical Administration) நிறைவு செய்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நேற்றுக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் இதற்கு முன் மொறவெவா ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றினார். பின்தங்கிய நிலைமையிலிருந்த மொறவெவா வைத்தியசாலையை தனது வழிகாட்டலின் கீழ் பல சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிகளின் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் சிறந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் என்ற ஸ்தானத்திற்கு கொண்டு வந்தார். இத்துரித அபிவிருத்திகளின் மத்தியில் மருத்துவ நிர்வாக முதுகலை மாணி பட்டப்பயிற்ச்சிக்கான தேர்வு பரீட்சையில் தெரிவானார்.

இவர் வைத்திய இளமானி பட்டம் மற்றும் மருத்துவ நிர்வாக முதுகலை மாணி பட்டப்பயிற்ச்சி என்பவற்றிற்கு மேலதிகமாக வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவைகளில் நிபுணத்துவ வணிக முகாமைத்துவ முதுகலைமாணி பட்டம் (MBA in Hospital & Health Services Management) (ஐக்கிய இராச்சியம்), சுகாதார தரநிலை மற்றும் நோயாளர் பாதுகாப்பு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பயிற்ச்சி (PG Dip in Healthcare Quality & Patient Safety) (கொழும்பு பல்கலைக்கழகம்)), சுகாதார தகவல் தொழில்நுட்ப துணை நிபுணத்துவ பட்டம் (Specialisation in Healthcare IT Support) (ஐக்கிய அமெரிக்கா), சுகாதாரத்துறைக்கான செயற்கை நுண்ணறிவுகளின் நெறிமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான பட்டம் (Ethics and Governance of Artificial Intelligence for Health) (உலக சுகாதார ஸ்தாபனம்) போன்றவற்றை நிறைவு செய்தமையுடன் தற்போது சுகாதார அபிவிருத்தி பட்டப்பின்படிப் டிப்ளோமா பயிற்ச்சியையும் (PG Dip in Healtl Development) (கொழும்பு பல்கலைக்கழகம் தொடர்கின்றார். இவரது பெற்றோர்கள் (வைத்திய கலாநிதி திரு மற்றும் திருமதி ஞானகுணாளன்) கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகிகளாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், திருகோணமலை பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார பணி பாளர் போன்ற பதவிகளில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வைத்தியர் ஞானகுணாளன் போல் ரொான், திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் எங்களை தண்டிக்கும் அளவிற்கே அரசு செயற்படுகின்றது!

## ஜனா எம்.பி. காட்டம்

ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்த நாட்டில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைக் கொடுக்க வேண்டிய இந்த அரசு, பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் எங்களைக் கூட தண்டிக்கும் அளவிற்கே இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் கொக்கட்டிச்சோலைப் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டித்தமைக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தகவலறிந்து நீதிமன்றில் முன்னிலையாகிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாடடின் ஜனநாயக ஆட்சி இன்று எங்களை நீதிமன்றம் வரை கொண்டு நிறுத்தியிருக்கின்றது. உண்மையிலேயே எங்களுக்கு பிடியானை இருப்பதாக யாருமே தெரிவிக்கவில்லை. புதன்கிழமை விவசாய அமைப்புக் கூட்டத்துக்காக கொக்கட்டிச்சோலை சென்ற போது அங்கு ஒரு பொலிஸ் அதிகாரி எனக்கும் தர்மலிங்கம் சுரேஸுக்கும் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தால் பிடியாணை இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அதன்பின்னர் தான் விசாரித்த போது கொக்கட்டிச்சோலைப் படுகொலை என்று சொல்லப்படும் 1987 ஆம் ஆண்டு காலகட்டத்திலே மகிழடித்தீவு இரால் பண்ணையைச் சுற்றியிருந்தவர்கள், இரால் பண்ணைக்குள் தஞ்சம் அடைந்தவர்கள், எந்தவித போராட்ட இயக்கங்களுடனும்; தொடர்புபடாத பொதுமக்களை இலங்கை அரச படைகள் கொன்று குவித்தனர்.

அவ்வாறு கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினைவாக மகிழடித்தீவு சந்தியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவுத் தூபியிலே ஆண்டு தோறும் அவர்களை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்துவது வழமை.

இந்த ஆண்டு ஜனவரியிலே கோட்டாபய ராஜ பக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கடும் கெடுபிடி இருந்தது. போராட்ட காலத்தில மரணித்த பொதுமக்களைக் கூட நினைவு கூரக் கூடாது என்கின்ற கண்டிப்பான உத்தரவு இருந்தது.

2015 தொடக்கம் 2019 வரை எமது உறவுகளை நினைவு கூருவதற்கு எமக்கு உரிமை இருந்தது. ஆனால் 2019 இலே ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசாங்கம் அதனை மறுத்திருந்தது. அந்தக் கால கட்டத்திலே பொது மக்கள் நினைவுகளை அனுஸ்டிக்கத் தயங்கிய போது நாங்கள் கடந்த ஜனவரி மாதம் அவர்களை நினைவு கூர்ந்திருந்தோம்.

அங்கு எம்மை நினைவு கூரக் கூடாது என்பதற்கான எந்தவித நீதிமன்றதடையுத்தரவுகளும் வழங்கப்படவில்லை. இருந்தும் நினைவுகூரலை மேற்கொண்டு நாங்கள் விளக்கேற்றும் போது கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் அங்கு வந்து இடையூறுகளை விளைவித்தனர்.

இருந்தும் நாங்கள் அந்த நினைவேந்தலைச் செய்தோம். அவ்வாறு இந்நிகழ்வுக்கு அவர்களால் தடையுத்தரவு வழங்கப்படவில்லை என்பதோடு, தடைத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அதனை மீறியமைக்காகவைக்கப்பட்டவழக்கிற்கானஅழைப்பாணை எமக்கு வழங்கப்பட்டு நீதிமன்றம் செல்லாமல் இருந்திருந்தாலும் பரவாயில்லை. நிகழ்வுக்கான தடையுத்தரப்படவில்லை, வழக்கிற்கு வருமாறு அழைப்பாணையும் இல்லை, ஆனால் இடையில் எமக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக அறியக் கிடைத்தது.

அந்த நிலையில் நாங்கள் எமது சட்டத்தரணிகள் ஊடாக நேற்று (வியாழக்கிழமை) வழக்கினை அழைத்து நீதிமன்றில் ஆஜராகியிருந்தோம். எதிர்வரும் பதினொராம் மாதம் இரண்டாம் திகதிக்கு வழக்கு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் நடக்கின்ற விடயங்களை இந்த நாட்டு மக்கள் மாத்திரமல்லர் சர்வதேசமும் அறிந்து வைத்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையககத்திலே 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு எதிராக மாறி மாறி பிரேரணைகள் வந்து கொண்டிருக்கின்றன.

தற்போது இலங்கை பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ள இந்நிலையிலும் கடந்த வாரமளவில் ஐ.நாவில் மேற்கொள்ளப்பட்ட பிரேரணையில் போர்க்குற்றங்களோடு சேர்த்து பொருளாதாரக் குற்றங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த வேளையிலே ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்த நாடு – பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைக் கொடுக்க வேண்டிய இந்த அரசு – பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் எங்களைக் கூட தண்டிக்கும் அளவிற்கு இருக்கின்றது. இவ்வாறாக எங்களைப் பயமுறுத்துவதன் ஊடாக எமக்காக உயிர்நீத்த மக்களை நாங்கள் நினைவு கூருவதைத் தடுத்து விடலாம் என்று நினைக்கின்றார்கள்.

அது முடியாத காரியம். நாங்கள் எமக்காக உயிர்நீத்த எமது மக்களை தொடர்ச்சியாக நினைவு கூர்ந்து கொண்டே இருப்போம் என்று தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவுக்கு எதிரான வாக்கெடுப்பில் 35 நாடுகள் பங்கேற்கவில்லையாம்!

*உக்ரைனின் நான்கு பகுதிகளை இணைக்கும் ரஷ்யாவின் முயற்சிக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், முன்னெடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் இலங்கை உள்ளிட்ட 35 நாடுகள் பங்கேற்கவில்லை. ரஷ்யாவுக்கு எதிரான பிரேரணையொன்று ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட் டிருந்த நிலையில், அது தொடர்பான வாக்கெடுப்பொன்று இலங்கை நேரப்படி நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை நடத்தப்பட்டிருந்தது.*

*மேற்படி வாக்கெடுப்பில், பிரேரணைக்கு ஆதரவாக 143 நாடுகளும் எதிராக 5 நாடுகளும் வாக்களித்தன. இந்த நிலையில், இலங்கை, இந்தியா, சீனா பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட 35 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.*

## பனை உற்பத்திற்கு அதிகமான கேள்வி மேற்குலக நாடுகளில் காணப்படுகின்றது

### லொகான் ரத்வத்த தகவல்

யாழில் பனைமரங்கள் இருக்கின்றபோதும் பனம் கள்ளைப் பெறுவதற்கான வழிவகைகள் தனக்கு கிடைக்கவில்லை என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த நகைச் சுவையாகத் தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலக நேற்று (வியாழக்கிழமை) கைதடியில் திறந்து வைக்கப்பட்டபோது அவர் இதனை நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

இங்கே உற்பத்தி செய்யப்படும் பனை உற்பத்திப் பொருள்களுக்கு மேற்குலக நாடுகளில் அதிக கேள்வி காணப்படுகின்றதோடு வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவ வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை 45 வருடங்களாக வாடகை வீட்டில் செயற்பட்டுவந்த பனை அபிவிருத்தி சபைக்கு இன்றைய தினம் (நேற்று) சொந்தமானதொரு புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டமை மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சமயத் தலைவர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு

### மட்டு. கரீத்தாஸ் எகெட் நிறுவன ஏற்பாட்டில்





மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தினால் சமயத் தலைவர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு மட்டக்களப்பு மன்றேசா பிரதான மண்டபத்தில் நடத்தப்பட்டது.

சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே. சிவபாலன் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற செயலமர்வில் மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்கநர் அருட்பணி ஏ.யேசுதாசன், சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே.சிவபாலன் குருக்கள், சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ், சர்வமத ஒன்றியத்தின் உபதலைவர் மௌலவி

சாஜஹான், அமெரிக்கன் சிலோன் மிசனின் கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி எம்.லூகேயோன் (லூக்) உள்ளிட்ட சர்வமத ஒன்றியத்தின் உறுப்பினர்களும் கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை இடம்பெற்ற இச் செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச பல் சமய ஒன்றியங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சமயத் தலைவர்கள், மாவட்ட பல்சமய சம்மேளன நிர்வாக குழு அங்கத்தவர்கள்எனப்பலரும்கலந்துகொண்டிருந்தனர்.

பன்முகத்தன்மைதொடர்பாகவிழிப்புணர்வூட்டப்பட்ட இச் செயலமர்வின்போது பல்சமய சூழலை புரிந்து கொள்வதன் அவசியம், ஞாபகங்களை குணமாக்குதல், பன்முகத்தன்மையின் அவசியம், சமய, சமூக தலைவர்கள் இவை தொடர்பாக எவ்வாறு தமது முன்னெடுப்புகளை முன்னெடுத்தல், சமயத்தலைவர்களின் பங்களிப்புக்கள் போன்றவை தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டது. இதன்போது தற்போதைய கால கட்டத்தில் மக்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து வளவாளராக கலந்துகொண்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் கல்முனை குருமுதல்வர் அருட்தந்தை சுஜித சிவநாயகம் விளக்கமளித்திருந்ஆர்.

மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனம் தொடர்ச்சியாக சமயத் தலைவர்கள் ஊடாக சமூகத்தின் முன்னேற்றம், சமூக மாண்பை மேம்படுத்தல் போன்ற மேலும் பல இவ்வாறான செயற்திட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழில் குற்றங்கள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர்கொட்டாச்சியின்கீழ்அச்சுவேலி, தெல்லிப்பழை, இளவாலை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, பலாலி போன்ற பகுதிகள் அடங்குகின்றன.

அண்மைய நாள்களாக பருத்தித்துறை,நெல்லியடி,வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுகளில் வழிப்பறிக் கொள்ளைகளும், வீடு உடைத்து திருடும் சம்பவங்களும், மோட்டார் சைக்கிள் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில் ஒரே நாளில் 4 களவுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. 3 வழிப்பறிச் சம்பவங்களில் 10 பவுண் நகைகள் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி ஒன்றில் வீட்டின் கூரை பிரித்து பகல் வேளையில் நான் கரைப் பவுண் நகைகளும், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

அதேநேரம், பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் பிரிவுகளில் கடந்த சில நாள்களாக மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபடுவதும் வடமராட்சிப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளது.

கடந்த சில நாள்களாகக் குற்றங்கள் அதிகரித்துள்ளபோதும், இதுவரையில் பொலிஸார் சந்தேகநபர்கள் எவரையும் கைது செய்யவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்று கூறும் பொதுமக்கள் வீதிகளில் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும், வீடுகளை விட்டு வெளியே செல்லமுடியாதநிலைமைஏற்பட்டுள்ளது என்றும் விசனிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பிராந்தியத்தில் நடக்கும் குற்றங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸார் விரைவாகச் செயற்பட்டு சந்தேகநபர்களைக் கைது செய்வதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது என்று தெரிவிக்கும் மக்கள், காங்கேசன்துறைப் பிராந்தியத்தில் அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை என்று கூறுகின்றனர்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர்கள் தமக்குக் கீழ் பல்வேறு பொலிஸ் குழுக்களை அமைத்து செயற்படுத்துவது வழமை என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸார், ஏனைய பொலிஸ் பிரிவுகளுக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்றாலும், இவ்வாறான குழுக்களுக்கு அந்த விடயத்தில் விதிவிலக்கு உண்டு என்று கூறப்படுகின்றது. அதனால் அந்தக் குழுக்கள் விரைவாக விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்யக் கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணம் பிராந்தியத்திலும் அவ்வாறான பொலிஸ் குழுக்களே குற்றவாளிகளை விரைவாகக் கண்டுபிடித்து நீதிமன்றங்களில் முற்படுத்துகின்றன.

காங்கேசன்துறைப்பிராந்தியத்திலும் அவ்வாறான பொலிஸ் குழுக்கள் முன்னர் செயற்பட்டிருந்தபோதும், இப்போது அந்தப் பொலிஸ் குழுக்களின் நடவடிக்கைகள் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும், அந்தக் குழுக்கள் செயற்றிறன் அற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளமையே குற்றச் செயல்கள் அதிகரிக்கக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுகளில் நடக்கும் குற்றங்கள் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று அங்குள்ள பொலிஸார் கூறுகின்றனர்.

ஒரு பொலிஸ் பிரிவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் இன்னொரு பொலிஸ் பிரிவில் தலைமறைவாக இருப்பதால்உடனடிநடவடிக்கைகளைத் தங்களால் மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். இருப்பினும் தங்களாலான முயற்சிகளை முன்னெடுக்கின்றோம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். திருடர்கள் அதிகளவில் நடமாடுவதால் மக்கள்விழிப்புடன்செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர்.

குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டிய பொலிஸார், குற்றவாளிகளைக் கைது செய்யாது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கின்றனர். இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. வீதியிலும், வீட்டிலும் அச்சத்துடனேயே இருக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ள மக்கள், இந்த விடயத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நலிவுற்றோரை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமீபத்தில்நான்ஆஸ்திரேலியாவுக்கு மேற்கொண்ட அதிகாரபூர்வ பயணம் தொடர்பில் உரையாடினோம். ஆஸ்திரேலியாவில் திகழும் பன்மைத்துவ கலாச்சாரம் பற்றிய பாடங்கள் இலங்கைக்கு அவசியம் என்பதை ஆஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபனுக்குத் தெரிவித்தேன்.

குறிப்பாக ஆஸ்திரேலிய அரசு மற்றும் அரசு நிலை அரசியல் பிரமுகர்கள் அங்கு வாழும், இலங்கையர்களுடன் குறிப்பாக புலம்பெயர்ந்துள்ள சிங்கள ஆஸ்திரேலியர்களுடனும், அவர்களது அமைப்புகளுடனும் தொடர்புகளை மேம்படுத்தி அவர்கள் மூலம் பன்மைத்துவ சிந்தனையை இலங்கைக்குள் கொண்டு வர உதவ வேண்டுமென வலியுறுத்தினேன்.

இலங்கையின் நெருக்கடிநிலைமையும், அதற்கான மாற்றமும் வெறுமனே பொருளாதார விடயங்களை சார்ந்தது அல்ல என்ற எமது நிலைபாட்டை அவருக்கு வலியுறுத்தினேன்.

பொருளாதார விடயங்களுக்கு அப்பால், மூல காரணமாக திகழ்வது இலங்கையில் பன்மைத்துவ கொள்கை ஏற்றுக்கொள்ளப்படாமையே என்ற தமிழ் மக்களின் எண்ணப்பாட்டை அவருக்கு சுட்டிக்காட்டினேன். ஆகவே, இலங்கையில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும் இலங்கை பன்மொழி, பன்மத, பல்லின நாடு என்ற பன்மைத்துவ கொள்கை அரசமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதிலேயே தங்கியுள்ளது. அதுவே மாற்றத்துக்கான ஆரம்பப் புள்ளி எனத் தெளிவுபடுத்தினேன்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை, மலையகத் தமிழர்கள், மிகவும் பின்தங்கிய தோட்டத் தொழிலாளர்கள், நடைபெற்ற அரகலய கிளர்ச்சி, எதிர்க்கட்சிகளின் உடனடித் தேர்தலுக்கான கோரிக்கை ஆகியவை பற்றியும் உரையாடினோம்.

இலங்கை சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நலிவுற்ற பிரிவினரான தோட்டத் தொழிலாளர்கள், தொழில் ரீதியாகவும், தமிழ் சிறுபான்மையினர் என்ற இன ரீதியாகவும் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் கூறினேன்.

பின்தங்கிய நலிவுற்ற பிரிவினருக்கு என ஆஸ்திரேலியா உட்பட உலக அரசுகள் வழங்கும் உதவித் தொகைகள், நன்கொடைகள் தோட்ட தொழிலாளர்களுக்கு பெரும்பாலும் கிடைப்பதில்லை. நலிவுற்ற பிரிவினரை அடையாளம் காண்பதில் இலங்கை அரசு கடைப்பிடிக்கின்ற அளவுகோல்கள் பிழையானவை. அவை அரசியல் மற்றும் சில வேளைகளில் தவறான இன அடிப்படைகளை கொண்டவை.

இதன் காரணமாக நலிவுற்ற பிரிவினரான தோட்டத் தொழிலாளர்கள் நலிவுற்றோர் பட்டியலில் இடம் பெறுவதில் தவிர்க்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த நலிவுற்றோரை அடையாளம் காணும் அளவுகோல்கள் பற்றி ஆஸ்திரேலியா, இலங்கை அரசிடம் கேள்வி எழுப்ப வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளேன்.

உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி, புதிய மக்களாணையை பெறுவதன் மூலமாகவே நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை, உலகரீதியான ஏற்புடைமை, பொருளாதார மீட்சிக்கான வழிவரைபு ஆகியன ஒழுங்கமைக்கப்படும் எனவும் கூறினேன் - என்றுள்ளது.

## யாழில் கட்டடத்தில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த மிராஜ் என அழைக்கப்படும் 31 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் அருகில் உள்ள விருந்தினர் விடுதிப் பணியாளர்கள் 10 பேரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புதிதாகக் கட்டப்பட்டு வரும் குறித்த கட்டடத்தில் வேலை செய்யும் குழு ஒன்று நேற்றிரவு அருகில் உள்ள தனியார் விருந்தினர் விடுதிக்குச் சென்று மது அருந்தியுள்ளனர்.

மது அருந்திய பின்னர் மது போதையில் விடுதியில் குழப்பத்தை ஏற்படுத்தி , விடுதிப் பணியாளர்களுடன் தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளனர். பின்னர் அங்கிருந்து அவர்கள் வெளியேறி தாம் வேலை செய்யும் புதிய கட்டடத்துக்கு வந்துள்ளனர்.

இந்தநிலையில், அவர்களில் ஒருவர் கட்டடத்தின் மேல் தளத்தில் இருந்து விழுந்து உயிரிழந்த நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் விடுதி பணியாளர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொழும்பில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

போராட்டத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான ஒன்றிணைந்த கலந்துரையாடல் கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சங்கம், இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இதில் பங்கேற்றிருந்தனர். இதன்போது அரசின் அடக்குமுறைகள் தொடர்பில் அனைவரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

அமைதி வழியில் போராடுவோர் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி வலிந்து தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும், அவர்களைக் கொலை செய்ய அரசு சதித்திட்டம் தீட்டுகின்றதுஎன்றும்மாணவர்அமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

அரசின் அடக்குமுறைகள் தொடர்பான செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர் என்றும், போராட்டக் களத்தில் செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களைப் பொலிஸ் அதிகாரிகள் பகிரங்கமாக எச்சரிக்கின்றனர் என்றும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தின் இறுதியில் ரணில் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கொழும்பில் எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி மாபெரும் போராட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

## மோ.சைக்கிள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனைவிலிருந்து ஹல்கந்தவில நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியே குறித்த பெண் உயிரிழந்துள்ளார் என்று பயாகல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஹல்கந்தவில அணைக்கட்டுச் சந்தியில் வசிக்கும் அனகியத்தயியகே நந்தாவதி (வயது 70) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். குறித்த பெண் இன்று காலை அருகில் உள்ள சந்தைக்கு வந்து வீதியைக் கடக்கும்போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பெண்ணைக் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது ஏற்கனவே உயிரிழந்திருந்தார் என்று விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பயாகல பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான அம்பாந்தோட்டைப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரை பயாகல பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பயாகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## எந்தத் தேர்தலும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இது தேர்தலை நடத்துவதற்கான நேரம் அல்ல. தேர்தலுக்கு அழைப்பு விடுப்பவர்கள் நாட்டைச் சீர்குலைக்க விரும்புபவர்கள். தேசத்தைச் சீர்குலைக்க நினைக்கும் இந்தச் சக்திகள் விரைவில் ஓரங்கட்டப்படுவர்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைதற்போதைய 8 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாகக் குறைப்பதும், ஆட்சியின் அனைத்து அடுக்குகளிலும் உள்ள விருப்பு வாக்கு முறையை இல்லாதொழிப்பதும் அவசியம்.

விவேகமுள்ள எவரும் இதை எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2022இல் வெளியிடப்பெற்றது.